பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 04 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புதுப்பிக்கப்பட்ட பாம்பன் ரயில் பாலம் நாளை திறக்கப்பட உள்ள நிலையில், மத்திய அமைச்சர்கள் திரு. அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் திரு. எல். முருகன் ராமேஸ்வரத்தில் இன்று ஆய்வு மேற்கொள்கின்றனர்.

2. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை மத்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் மருத்துவ சுற்றுலா அதிகரித்து வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் சயின் சிங் வெண்கலப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ராமேஸ்வரம் வரவுள்ள நிலையில், மத்திய ரயில்வே மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஆய்வு செய்கிறார்.

புதிதாக கட்டப்பட்டுள்ள பாம்பன் ரயில் பாலத்தை அமைச்சர் பார்வையிட உள்ளார்.

பிரதமர் நாளை தொடங்கி வைக்க உள்ள புதிய ரயில் சேவை தொடர்பாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

அவருடன் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகனும் ராமேஸ்வரம் சென்று ஆய்வு மேற்கொள்கிறார்.

<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை மத்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் புத்தொழில் திருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், அங்கு நடைபெறும் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியில் இந்தியா உலக அளவில் முன்னோடி நாடாக உருவெடுத்து வருகிறது என்றார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த புத்தொழில் திருவிழாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களும், 50 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் தமிழகத்தில் ஒரு கோடியே 71 லட்சம் பயனாளிகள் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர்வ, இத்திட்டம் தமிழகத்தில் முதலமைச்சரின் விரிவன மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மருத்துவ சுற்றுலா அதிகரித்து வருவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் கூறியுள்ளார்.

மருத்துவ சுற்றுலா தொடர்பாக சென்னையில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், தரமான மருத்துவ வசதிகளை வழங்குவதில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்றார்.

(வாய்ஸ் பைட் - ராஜேந்திரன் - 50 நொடிகள்)

இந்த மாநாட்டில் பேசிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவ சுற்றுலாவுக்காக இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டவர்களில் 25 சதவீதம் பேர் தமிழகத்திற்கு வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் மலைப் பகுதிகளில் மழைக்காலங்களில் நிலச்சரிவைக் கட்டுப்படுத்த நவீன மண் ஆணி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளதாக மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.

உதகமண்டலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டதாகக் கூறினார்.

இதன் வெற்றியைத் தொடர்ந்து கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி ஆகிய மலைப் பகுதிகளில் இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. எ.வே. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம் கடந்த நிதியாண்டில் 41 புள்ளி ஏழு இரண்டு மில்லியன் டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக அந்த துறைமுக ஆணையத்தின் தலைவர் திரு. சுஷாந்த் குமார் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இதனைத் தெரிவித்த அவர், ஆயிரத்து 209 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இது கடந்த நிதியாண்டை ஒப்பிடுகையில் 7 புள்ளி ஏழு சதவீதம் அதிகம் என அவர் தெரிவித்தார்.

இத்துறைமுகத்தில் 6 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை அமைக்கும் பணி மற்றும் 10வது சரக்கு தளத்தை மேம்படுத்தும் பணி போன்றவை நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

திருவாரூரில் ஆழித் தேரோட்டம் நாளை மறுநாள் நடைபெற உள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தேரை அலங்கரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, ஈரோடு, தேனி, திண்டுக்கல், சேலம், திருப்பூர் ஆகிய 7 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியசை ஒட்டி பதிவாகும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே திருப்பத்தூர், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் பரவலாக நேற்று மாலை மழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்கொரிய நாடாளுமன்றத்தால் அந்நாட்டு அதிபர் திரு யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் அந்நாட்டு அரசியல் சாசன நீதிமன்றம் அதை உறுதி செய்துள்ளது.

-----------

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு போர்ச்சுகல் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக நாளை மறுநாள் புறப்பட்டுச் செல்கிறார்.

-----------

நாட்டில் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் புற்றுநோய்க்கு 68 லட்சம் பேருக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

-----------

உள்நாட்டு எஃகு உற்பத்தி, கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய எஃகு துறை இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்துள்ளார்.

-----------

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துக்காக கடந்த நிதி ஆண்டில் 63 ஆயிரத்து 864 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் கூறியுள்ளார்.

-----------

தமிழகத்தில் 40 குடும்பல நல நீதிமன்றங்கள் செயல்பாட்டில் உள்ளதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

-----------

தமிழகத்தில் தொழில்நுட்ப ஜவுளி மற்றும் செயற்கை இழைகள் குறித்த ஆராய்ச்சிக்கான நிதி உதவியைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான இணையதளத்தை மாநில கைத்தறித் துறை அமைச்சர் திரு காந்தி தொடங்கி வைத்தார்.

-----------

தமிழகத்தில் பாரு கழுகுகளின் எண்ணிகை 157ஆக அதிகரித்துள்ளதாக மாநில வனத்துறை தெரிவித்துள்ளது.

-----------

தமிழக – கேரள எல்லையில் உள்ள கண்ணகி கோயிலில் நடைபெற உள்ள சித்திரை முழு நிலவு திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக தேக்கடியில் தேனி மற்றும் இடுக்கி மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

-----------

திருவாரூர் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகை பெற மே 30-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

-----------

திருவள்ளூரில் டிஎன்பிஎஸ்சி குரூப்-4 தேர்வின் மூலம் தேர்வு பெற்ற 18 பேருக்கு மாவட்ட ஆட்சியர் திரு பிரதாப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

-----------

சென்னையில் குட்கா உள்ளிட்ட புகையிலைப் பொருட்கள் புழக்கத்தைத் தடுக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர காவல் ஆணையர் திரு அருண் கூறியுள்ளார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Chain Singh** வெண்கலப் பதக்கம் வென்றார்.

அர்ஜென்டினாவில் நடைபெற்ற இப்போட்டியில் 50 மீட்டர் ரைஃபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தை வென்றார்.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 12 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

**<<<<The End>>>>**